# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 0025/2017/ந

ஆணை எண்: 081/2017

நாள்: 27/04/2017

திரு. R. பாஸ்கர்,
த/பெ. E. ராமச்சந்திரன்,
22/1, பாடசாலைத் தெரு,
மிட்டனமல்லி, 2வது வார்டு,
IAF ஆவடி, சென்னை – 600 055. – முறையீட்டு மனுதாரர்

திரு. E. சிவலிங்கம்
மற்றும் மூவர் – எதிர் மனுதாரர்கள்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 06.02.2017 நாளிட்ட முறையீட்டு மனு 07.02.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0025/2017 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவில் ஆவடி நகராட்சி 2-வது வார்டில் பாடசாலைத் தெருவில் கிராம நத்தம் சர்வே எண்.282/2A1B, நகர நில அளவைப்படி A/39ல் திரு. E. சிவலிங்கம் அவரது இரு மகன்கள் மற்றும் திரு. M. குமார் ஆகியோர் தெருவை ஆக்கிரமித்து காம்பவுண்டு சுவர் மற்றும் வீடு கட்டியுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆக்கிரமிப்புகளால் பாதசாரிகளுக்கும்

போக்கு வரத்திற்கும் மிகுந்த இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஆவடி பெரு நகராட்சி ஆணையருக்கு புகார் கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அறிவிப்பாணை எண்.0025/2017/ந நாள்: 10.02.2017ன் மூலம் ஆவடி நகராட்சி ஆணையரது அறிக்கை கோரப்பட்டது. மேலும், 11.04.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணை (அ.ம.எண்.0025/17/ந நாள்: 23.02.2017) அனுப்பப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் இப்பொருள் குறித்து ஆவடி நகராட்சி ஆணையருக்கு முகவரியிட்டு அனுப்பிய 05.12.2016 நாளிட்ட மின்னஞ்சல் புகாரின் நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கு 02.03.2017 அன்று சில புகைப்பட ஆதாரங்களை இணைத்து வரப்பெற்றது. அவற்றின் நகல் இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை முறையீட்டு மனு எண்.0025/2017/ந நாள்:10.03.2017 உடன் ஆவடி நகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை எடுத்து தக்க பதிலறிக்கையினை சமர்ப்பித்திடுமாறு ஆணையிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 11.04.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்ட சாலை ஆக்கிரமிப்பு குறித்து மீள வலியுறுத்தி தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்தார்.

மேலும், முறைமன்ற நடுவர் அவர்களின் ஆணைகளின்படி முறையீட்டு மனுதாரர் ஆவடி நகராட்சி கட்டிட ஆய்வாளர் மற்றும் நில அளவருடன் புகாருக்குட்பட்ட ஸ்தலத்திற்கு சென்று அங்குள்ள நிலவரங்களை சரி பார்த்திட இசைவு தெரிவித்து மேற்குறிப்பிட 11.4.2017 தேதியிட்ட தனது வாக்கு மூலத்தில் உறுதி அளித்துள்ளார். அதனைத் தொடர்ந்து 13.04.2017 அன்று இம்முறைமன்ற நடுவர் முன்பு நேரில் ஆஜரான ஆவடி நகராட்சியின் நகரமைப்பு அலுவலர் திரு. எஸ்.வி. மாறன் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களது ஆணைகளுக்கிணங்க சம்பந்தப்பட்ட இடத்தினை மனுதாரர் மற்றும் நில அளவையருடன் இணைந்து பார்வையிட்டதாகவும் ஆக்கிரமிப்பு இருப்பது உண்மைதான் எனவும் வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார். மேலும், மேற்படி ஆக்கிரமிப்புக்குட்பட்ட இடம் நகராட்சி சாலை என்பதால் ஆக்கிரமிப்புகளை 10 நாட்களுக்குள் அகற்றப்படுமெனவும் உறுதியளித்துள்ளார்.

எனவே, நகராட்சி சாலை ஆக்கிரமிப்புகளை சட்டமுறைகளின்படி அகற்றுவதோடு மட்டுமன்றி அவ்வாறு அகற்றப்பட்ட ஆக்கிரமிப்பு பகுதிகளின் அளவு மற்றும் அதன் மதிப்பீடு

விவரங்களடங்கிய அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறும் ஆவடி நகராட்சி ஆணையருக்கு வலியுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   ஆவடி நகராட்சி, ஆவடி,
   சென்னை – 600 055.

2. திரு. R. பாஸ்கர்,
   த/பெ. E. ராமச்சந்திரன்,
   22/1, பாடசாலைத் தெரு,
   மிட்டனமல்லி, 2வது வார்டு,
   IAF ஆவடி, சென்னை – 600 055.

நகல்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்.